NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 15 May 2020

# கொவிட்-19 நோயாளிகளுக்காக என்யுஎஸ் குடியிருப்பு வளாகம்

உடல்நிலை தேறி வரும் கொவிட்-19 நோயாளிகளைப் பராமரிக்க சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள ‘பிரின்ஸ் ஜார்ஜஸ் பார்க் ரெசிடன்ஸ்’, தற்காலிக சமூக வசிப்பிடமாக அடுத்த வாரம் மாறவுள்ளது.

குணமடைந்து வரும் கொவிட்-19 நோயாளிகள் தங்க, இக்குடியிருப்பு வளாகத்தில் உள்ள 28 புளோக்குகள் இம்மாதம் 18ஆம் தேதி முதல் ஜூலை மாதம் வரையில் பயன்படுத்தப்படும். இங்கு கிட்டத்தட்ட 2,900 அறைகள் உள்ளதாக கூறப்படுகிறது. அறைகளில் தங்கியிருந்த மாணவர்களும் அதிகாரிகளும் தாம் கேட்டுக்கொண்டதற்கு இணங்கி, மிகக் குறுகிய காலத்தில் வெளியேறி வேறு மாணவர் விடுதிகளுக்குச் சென்றதற்காக என்யுஎஸ் தலைவர் டான் இங் சாய், தம் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

இவ்விடத்திற்குக் கொண்டுவரப்படும் நோயாளிகளின் நடமாட்டத்தை அணுக்கமாகக் கண்காணிப்பது, அடிக்கடி இடத்தைச் சுத்தம் செய்வது, நோயாளிகளுக்கென தனி போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்வது போன்ற கடுமையான நடவடிக்கைகள் நடப்பில் இருக்கும் என்று கூறப்படுகிறது.



கோப்புப் படம்

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.